# பெண்கள் ஆபரணங்கள் அணிவதன் சாஸ்திரம்

(Science underlying women wearing Ornaments - Tamil)

## முன்னுரை

'சிர முகுட குண்டல திலக சாரு உதாரு அங்க விபூஷணம்' எங்கு தெய்வங்களே அலங்கார ஆபரணங்களோடு திகழ்கிறதோ, அங்கு மனிதர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். பெண்களின் அழகு மற்றும் நளினத்தைப் பாதுகாப்பதற்காக ஆயிரம் வருடங்கள் பழைமையான விலைமதிப்பற்ற ஸன்ஸ்காரமே ஆபரணம். ஆபரணம், பெண்களுக்கான வெறும் அழகு மற்றும் ஆடம்பர ஸாதனம் மட்டும் அல்ல. ஆபரணம் என்பது பெண்களுக்கு ஈச்வர சைதன்யத்தை வழங்குவதோடு அவர்களிடம் உள்ள தெய்வத் தன்மையை விழிப்படையச் செய்யும் ஒரு மஹத்துவம் வாய்ந்த கருவியாகும் என்று சாஸ்திரபூர்வமாக இந்த கையேட்டில் கூறப்பட்டுள்ளது.

நிகழும் கலியுகத்தில் ஏறக்குறைய

ஒவ்வொருவரும் குறைந்த அல்லது அதிக அளவில் தீய சக்திகளால் பீடிக்கப்-பட்டுள்ளனர். சாதாரணமாக முன்னோர்கள், பூதங்கள் மற்றும் தீய சக்திகளின் தாக்குதலி-லிருந்து பாதுகாப்பு பெற ஆபரணம் எவ்வளவு உதவி புரிகிறது என்பதும் இந்த கையேட்டில் கூறப்பட்டுள்ளது. ஒரு முறை ஒரு ஸாதகரிட-மிருந்து வெளிப்பட்ட தீய சக்திக்கு (மாந்த்ரீகன்) அவள் அணிந்திருந்த ஆபர-ணங்களை தாக்கும் வெறி எழுந்தது. இதிலிருந்து ஆபரணங்களின் மஹத்துவம் நிரூபணமாகிறது. அவ்வப்பொழுது ஆபர-ணங்களில் விபூதி தடவி அணிவது எவ்வளவு உன்னதமானது என்பது இந்த ஸாதகர் மூலம் செய்யப்பட்ட சூட்சும ஞான ப்ரயோகத்தின் மூலம் தெளிவாகிறது. இதிலிருந்து ஆபரணங்களின் தூய்மையின் முக்கியத்-துவமும் தெரிய வருகிறது. பெண்களின்

பலவித ஆபரணங்கள், அவற்றின் மஹத்துவம் மற்றும் அவற்றை அணிந்து செய்யப்பட்ட சூட்சும பரிசோதனை ஆகியவற்றின் விளக்கங்கள் ஆபரணங்கள் பற்றிய நூல் தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த கையேட்டின் மூலம் ஆபரணம் மற்றும் இது போன்ற சைதன்ய விஷயங்களைத் தந்துள்ள ஹிந்து தர்மத்தின் மஹத்துவத்தை அனைவரும் உணர வேண்டும் என்பதே குரு சரணங்களில் செய்யப்படும் பிரார்த்தனை. - **தொகுத்தவர்**

'பரம்பூஜ்ய டாக்டர் ஆடவலே போன்றவரின் தலைமை நம் தேசத்திற்கு தேவை, அப்பொழுதுதான் நம் தேசமும் தர்மமும் காப்பாற்றப்படும்!' - **ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ த்ரிதண்டி ஸ்ரீநிவாஸ் வ்ரததர் நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமிஜி, பாக்யநகர், ஆந்திரப்ரதேஷ்.**

# அட்டவணை

1. ஆபரணங்களை அணிவதன் முக்கியத்துவமும் பயன்களும் 12

2. அதிக உணர்ச்சி வசப்படும் பெண்கள் எம்மாதிரி ஆபரணங்களை அணிய வேண்டும்? 25

3. ஏன் விதவைகள் ஆபரணங்களை அணியக் கூடாது? 28

4. ஆபரணங்கள் அணிந்த மற்றும் அணியாத பெண்கள் 30

5. தீய சக்திகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத பெண்களின் மீது ஆபரணங்களால் ஏற்படும் பரிணாமம் 33

6. ஆபரணங்கள் அணிவதைப் பற்றிய சூட்சும பரிசோதனை 47

7. ஆபரணங்கள் அணிவது பற்றிய அன்றாட குறிப்புகள் 78

8. ஆபரணங்கள் யாருக்குத் தேவையில்லை? 79